மகத்தான சாதனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அம்மாவினுடைய அரசு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுத் துறையுடன் எல்லாத் துறைகளும் சேர்ந்து இதைச் செய்திருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் போன்ற மூத்த அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள்; எல்லோரும் சேர்ந்து இதைச் செய்திருக்கிறார்கள். ஆகையால், ஓரிரு நாட்களில் மக்கள் பிரதிநிதிகளுக்கு முதற்கட்டமாக தடுப்பூசி வழங்குவதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***27413—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறியில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் பெய்கின்ற வடகிழக்குப் பருவ மழையின்போது ஏற்படுகின்ற பேரிடர்கள்; இந்த ஆண்டு நிவர் புயல், புரவிப் புயல், முன்னெப்போதும் இல்லாத மழைப் பொழிவு; இதையெல்லாம் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, கணக்கெடுப்பு நடத்தி, முன்னெப்போதும் இல்லாத வகையில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு உயர்த்தப்பட்ட இடுபொருள் மானியமாக, நிவர் புயலுக்கு ரூபாய் 115 கோடியே 27 இலட்சமும்,*

2021 பிப்ரவரி 4]

புரவி புயலுக்கு ரூபாய் 565 கோடியே 92 இலட்சமும், முன்னெப்போதும் இல்லாத மழைப்பொழிவுக்கு 11.43 இலட்சம் விவசாயிகளுக்கு 1,116.97 கோடி ரூபாய் அளவிற்கு இடுபொருள் மானியமும் நிவாரணமாக இன்றைக்கு வேளாண் பெருமக்களுக்கு வழங்கி, வேளாண் பெருங்குடி மக்களுடைய பாதுகாவலராக, விவசாயிகளின் பாதுகாவலராக இருப்பவர் நம்முடைய விவசாய முதலமைச்சர் அவர்கள்.

இன்றைக்கு மழை கொட்டுகின்றபோதே மக்களுடைய அச்சத்தைப் போக்குகின்ற வகையில், சென்னையில் செம்பரம்பாக்கம் ஏரியை ஆய்வு செய்து, வெள்ளம் சூழ்ந்திருந்த நேரத்திலும்கூட தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது மக்களுடைய உயிர் காக்கின்ற முதல்வராக, இன்றைக்கு அசைக்க முடியாத மக்களின் பாதுகாவலர் என்கின்ற நம்பிக்கையைப் பெற்றிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். நம் தெய்வத்தாய் துயில் கொண்டிருக்கின்ற நினைவாலயத்தை பீனிக்ஸ் பறவை போன்று வடிவமைத்துத் திறந்து வைத்து, புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் வாழ்ந்த வேதா இல்லத்தை திறந்து வைத்து, புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பிறந்த தின விழாவினை அரசு விழாவாக அறிவித்து, அதோடு இன்றைக்கு சாமானியத் தொண்டனாக, பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களுக்கும், தமிழர் குலசாமி புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் அமைத்திருக்கிற திருக்கோயிலை, தாயுள்ளத்தோடு வருகை தந்து, தன்னுடைய விசுவாசத்தின் அடையாளமாக திறந்து வைத்து உலகத்தின் கவனத்தை தன்பால் ஈர்த்திருக்கின்றார் பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அம்மாவின் புனித அரசை தலைமை தாங்கி வழிநடத்தி வருகின்ற எளிமை, தூய்மை, தாய்மை, பொறுமை, மதிநுட்பம், தொலைநோக்குப் பார்வை, மனித நேயத்தை தன்னகத்தே கொண்டிருக்கின்ற பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில், 2021–ல் அம்மாவின் புனித அரசு தொடர வேண்டுமென்று பட்டிதொட்டி எங்கும் ஒரே பேச்சு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பேச்சுக்கு உயிர் கொடுக்கின்ற வகையில் இன்றைக்கு உழைத்து, வெற்றி வாகை சூடி, பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் அம்மாவின் அரசு தொடர்ந்து இந்தத் தாய்த் தமிழகத்திற்கு சேவையாற்ற புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆன்மாவும், பாரத ரத்னா புரட்சித் தலைவர்

அவர்களின் ஆன்மாவும் அண்ணன் அவர்களுக்கு என்றைக்கும் துணை நிற்கும் என்று தெரிவித்து, அவரை வணங்குகிறேன். நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதில் தொடர்ந்து சரித்திர சாதனை படைத்து வருகின்ற, ஜல்லிக்கட்டு உரிமையை மீட்டுத் தந்திட்ட ஜல்லிக்கட்டு நாயகன், இன்றைக்கு அனைத்துமாய் துணை நின்று, சாதனை சரித்திரம் படைத்து வருகின்ற பணிவின் சிகரம், பாசத்தின் உறைவிடம், பாசமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் முசிறி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

திரு. எம். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழக விவசாயிகளின் பாதுகாவலர், சாமானிய மக்களின் முதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி சட்டமன்றத் தொகுதி, முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகம், மிகவும் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்சமயம் அது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அக்கட்டடம் கட்டப்பட்டு பல ஆண்டுகளாகியுள்ளதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

2021 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, முசிறி வட்டாட்சியர் அலுவலகம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடம் 1914 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். மேற்படி கட்டடம் முசிறி வட்டம், முசிறி மேற்கு கிராமம், அரசுப் புறம்போக்கு தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு நிலத்தில் செயல்பட்டு வருகின்றது. இதில், வட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் குடியிருப்பு மற்றும் அரசு அலுவலகங்கள் எல்லாம் செயல்பட்டு வருகின்றன. முசிறி வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதிதாகக் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இன்றைக்கு உலகம் கண்டிராத உலகப் பேரிடரான கொரோனா வைரஸ், Covid–19 நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள், மீட்பு நடவடிக்கைகள், நிவாரண நடவடிக்கைகளில் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்து, சாதனை படைத்து, மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அக்கட்டடம் பழமைவாய்ந்த கட்டடமாக இருப்பதால், அந்த அலுவலகத்திற்கான கட்டடத்தை இந்த ஆண்டே கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

சொன்னதைப்போல, இந்த ஆண்டே அதைச் செயல்படுத்துவதற்கு பரிசீலிக்கப்படும். ஏனென்றால், அது மிகவும் பழமைவாய்ந்த கட்டடமாக இருக்கின்ற காரணத்தினால், மக்கள் வந்து செல்வதற்கு பாதுகாப்பானதாக, அதைப் புதிதாகக் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆத்மாவை வணங்குகிறேன். கிராமப்புற மக்களைத் தேடி மருத்துவம் என்கிற உன்னத நோக்கத்தோடு, 2,000 மினி கிளினிக்குகளை தமிழகத்தில் திறந்து சாதனை படைத்திருக்கின்ற தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே பயணிக்கின்ற முதலமைச்சர் என்கின்ற காரணத்தினால், விளையாட்டு வீரர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிய 2 சதவீத இட ஒதுக்கீட்டை, 5 சதவீதமாக உயர்த்தி வழங்கிய முதலமைச்சரான மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் என்கிற வெற்றி நாயகனை வணங்குகிறேன். அதோடு மட்டுமல்லாமல், அடித்தட்டில் வாழ்கிற பள்ளிக் குழந்தைகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிய 2 செட் சீருடைகளை, 4 செட் சீருடைகளாக உயர்த்தி வழங்கிய குடிமராமத்து நாயகன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.*

குறிப்பாக, அரசுப் பள்ளி மாணவர்களுக்காக மருத்துவத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி, 7.5 சதவீத உள் இட ஒதுக்கீட்டை வழங்கி, அதன்மூலம் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலக்கூடிய 435 மாணவ, மாணவிகளுக்கு இன்றைக்கு மருத்துவக் கல்வி பயிலக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொடுத்த, விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய தொகுதியில், 7.5 சதவீத உள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 3 மாணவ, மாணவிகளுக்கு

2021 பிப்ரவரி 4]

மருத்துவம் பயில்கின்ற வாய்ப்பை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர், அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய விருத்தாசலம் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கரிகால்சோழனைப் பற்றி நாம் வரலாற்றில் படித்திருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முதற்கொண்டு, நான், எனது மகன் முதற்கொண்டு படித்திருக்கின்ற வரலாற்றுப் புத்தகத்தில், தமிழகத்தில் கல்லணையைக் கட்டிய கரிகால்சோழனைப் பற்றி பள்ளிகளில் பாடமாகக் கொண்டு வந்திருக்கின்ற நிலையில், கடலூர் மாவட்டத்தில் மட்டும் 14 தடுப்பணைகளைக் கட்டிக் கொடுத்த, நம்முடைய வாழும் கரிகால்சோழன் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் குறித்த செய்திகளை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றுப் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும்; இதுகுறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத்தொடரிலேயே பதில் சொல்ல வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக முன்வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

நம்முடைய மருத்துவத் துறையிலே அம்மாவின் உன்னதத் திட்டமான 2,000 மினி கிளினிக்குகளைத் திறந்து சாதனை படைத்த, தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கிராமப்புற மக்களைத் தேடி மருத்துவம் என்கிற அடிப்படையிலே மேலும் கூடுதலாக 1,000, 2,000 மினி கிளினிக்குகளைத் திறப்பதற்கு உத்தரவு வழங்க வேண்டுமென்கிற பணிவான வேண்டுகோளை அவர்களின் பாதத்திலே முன்வைக்கின்றேன். வருவாய்த் துறையின்கீழ் செயல்படும் விருத்தாசலம் வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்ட மிகவும் பழமையான கட்டடமாகும். தற்போது அது பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனை உடனடியாகக் கட்டுவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் துவங்கப்பட்ட வட்டங்களுக்கு உடனடியாகக் கட்டடங்களைக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்கீடு உடனடியாகச் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பழமையான கட்டடங்களெல்லாம் மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலே இருக்கின்றனவா என்று மாவட்ட நிருவாகத்தின் சார்பில் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையிலே, மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலே அந்தக் கட்டடங்கள் இல்லையென்று சொன்னால், அதனை உடனடியாகப் புதுப்பித்து, புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் பெறப்படும். எனவே, பழமையான கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையைப் பரிசீலித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

10—

ஆவின் பாலகத்திற்கு கட்டடம்

***48854—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி-வேலூர் தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், கோக்கலை ஊராட்சி, மேட்டுப்பாளையத்தில் உள்ள ஆவின் பாலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?